செ.வெ.எண்:44 நாள்:22.10.2021

**கிருஷ்ணகிரி மீனாட்சி மஹாலில் அனைத்து வங்கிகள் சார்பாக நடைபெற்ற மாபெரும் வாடிக்கையாளர் தொடர்பு முகாமில் ரூ.120.74/- கோடி மதிப்பிலான கடன் ஆணைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இ஡ப., அவர்கள் இன்று 22.10.2021 வழங்கினார்.**

**சமூக பொருளாதார முன்னேற்றத்திற்கு வங்கிகளின் பங்களிப்பு மிகவும் முக்கியமானது என வங்கியாளர்களை பாராட்டி மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இ஡ப., அவர்கள் பெருமிதம்.**

**இளம் வயது வங்கி மேலாளர்கள் அஞ்செட்டி, பெட்டமுகிலாம் போன்ற மலை கிராமங்களுக்கு நேரில் சென்று வங்கி கணக்கு துவக்கி பொது மக்களுக்கு உதவிட வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இ஡ப., அவர்கள் அறிவுறுத்தினார்.**

**கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 2020-21 ஆண்டில் நிர்ணயக்கப்பட்ட இலக்கை விட இருமடங்கு கடன் வழங்கப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இ஡ப., அவர்கள் பாராட்டினார்.**

கிருஷ்ணகிரி, மீனாட்சி மஹாலில் அனைத்து வங்கிகள் சார்பாக நடைபெற்ற மாபெரும் வாடிக்கையாளர் தொடர்பு முகாமை குத்து விளக்கேற்றி துவக்கி வைத்தார். வங்கிகள் சார்பில் ரூ.120.74/- கோடி மதிப்பிலான கடன் ஆணைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இ஡ப., அவர்கள் இன்று 22.10.2021 வழங்கினார். தொடர்ந்து, வங்கிகள் சார்பாக அமைக்கப்பட்ட வாடிக்கையாளர் சேவை மையத்தை பார்வையிட்டு கடனை தவறாது திருப்பி செலுத்திய வாடிக்கையாளர்களை கௌரவப்படுத்தினார். இந்நிகழ்ச்சிக்கு இந்தியன் வங்கி, சென்னை, பொது மேலாளர் திரு.எம்.வெங்கடேசன் அவர்கள் முன்னிலை வகித்தார். இந்தியன் வங்கி மண்டல மேலாளர் திரு.எ.பழனி வரவேற்புரை வழங்கினார்.

மத்திய நிதியமைச்சகம் மற்றும் தமிழ்நாடு மாநில அளவிலான வங்கியாளர்கள் குழுமம் அறிவுறுத்தலின்படி, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அனைத்து வங்கிகளின் ஒருங்கிணைப்போடு மாபெரும் வாடிக்கையாளர் தொடர்பு முகாம் (Mega Outreach Campaign) இன்று 22.10.2021 மீனாட்சி மஹால் (LIC அருகில்) கிருஷ்ணகிரியில் இந்தியன் வங்கி மற்றும் மாவட்ட முன்னோடி வங்கி சார்பில் நடைபெற்றது.

இந்த முகாமில் மாவட்டத்தில் உள்ள அனைத்து வங்கிகளும் கலந்து கொண்டு விவசாயம், தொழில், வீடு, வாகனம் மற்றும் இதர கடன் திட்டங்கள், பாரத பிரதமரின் மக்கள் நிதி திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் காப்பீடு மற்றும் ஓய்வூதிய திட்டங்கள் மற்றும் வங்கி மின்னனு பரிவர்த்தனைகள் (DIGITAL TRASACTION PRODUCTS) -ஐ பற்றி விளக்கமளிக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் பாரத மாநில வங்கி மண்டல மேலாளர் திரு.வி.ராஜா, தமிழ்நாடு கிராம வங்கி மண்டல மேலாளர் திரு.ஆர்.பாஸ்கரன், கனரா வங்கி மண்டல மேலாளர் திருமதி கே.எஸ்.மாதவி, திட்ட இயக்குநர்(மகளிர் திட்டம்) திரு.எஸ்.ஈஸ்வரன், மாவட்ட தொழில் மையம், பொது மேலாளர் திரு.எஸ்.பிரசன்னா பாலமுருகன், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் திரு.ஆர்.மகேந்திரன், நபார்டு பொது மேலாளர் திரு.எஸ்.ஜெயபிரகாஷ், நிதிசார் கல்வி மைய ஆலோசகர் திரு.பூசாமி, மாவட்ட வங்கி ஒருங்கிணைப்பாளர்கள், கிளை மேலாளர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கிருஷ்ணகிரி.**